# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII, Cr.P.C)

## IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, RANIPET

Case No. **SC.No.77/2023**
Prosecution: **PW** -4

**Deposition of the witness of LW** -5

| | | | |
|---|---|---|---|
| **Name** | பரிமளா | **District** | திருவண்ணாமலை |
| **Husband's Name** | முனியான்டி | **Calling** | கூலி வேலை |
| **Age** | 56 | **Religion** | |
| **Village/Town** | அருணகிரிசத்திரம் | **Caste** | |
| **Taluk** | ஆரணி | **Aadhar Card No.** | 9093 1938 0937 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of July 2026.

1,3,5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி சிறையில் இருந்து பிடியாணை மூலம் ஆஜர் செய்யப்பட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 4ம் எதிரி தன் வழக்கில் தானே நேரடியாக ஆஜர் ஆவதாக தெரிவித்தார்.

**<u>முதல் விசாரணை:—</u>**

1. நான் எண் 24/40 திருவள்ளுவர் தெரு, அருணகிரி சத்திரம், ஆரணியில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்துவருகிறேன். அ.சா.3 எனது மகள். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று நினைவில்லை.

(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக சாட்சியம் அளிக்காததால், அவரை பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டார். சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:—</u>**

1. காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் விசாரணையின் போது எனது இளைய மகன் நிஷா சுமார் 8 வருடத்திற்கு முன்பு திமிரியில் உள்ள மெடிக்கல் அகடமியில் நர்ஷிங் படித்தபோது அவரது நண்பர்களுடன் சிவன் கோவிலுக்கு சென்றபோது மலை அடிவாரத்தில் யாரோ திருடர்கள் 5 நபர்கள் என் மகளையும், அவருடன் சென்றவர்களையும் வழி மடக்கி கத்தியை காட்டி மிரட்டி எனது மகளின் காதில் இருந்த தோடை கழற்ற சொல்லி பிடிங்கிகொண்டதாகவும், கூச்சல் கேட்டு பொது மக்கள் என் மகளை காப்பாற்றியதாகவும், இந்த சம்பவம் குறித்து எனது மகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், சம்பவம் குறித்து தான் கேள்விபட்டதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

இல்லை.

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-A.Daoudh Ammal,
Assistant Sessions Judge/Chief Judicial Magistrate, Ranipet.